2014 ஜூலை 30]

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

93. திருச்சிராப்பள்ளி, திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி ஆகிய மாநகராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை நிர்ணயித்தது குறித்தும், 11-6-1996 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில், பாகம் II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட II(2)/MW/1197(f-5)/96 *ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்தும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 28-6-2011 ஆம் நாளிட்ட 89 ஆம் எண் அரசாணையில்* (i) முதல் (vi) *வரை வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 7/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு, 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

94. அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நகராட்சிகளுக்கான சிற்றொகுதிகளுக்கு, தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த நபர்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடியினைச் சார்ந்த பெண்கள் மற்றும் பெண்களுக்கான இடஒதுக்கீட்டினை நிர்ணயம் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 15-9-2011 ஆம் நாளிட்ட 141 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

95. விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாநகராட்சிகளுக்கான மேயர் பதவிகளுக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த பெண்கள் மற்றும் பெண்களுக்கான

இடஒதுக்கீட்டினை நிர்ணயம் செய்தது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 16-9-2011 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2008) 10(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு மற்றும் 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/2008) 10(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

96. (i) 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2012) 25-10-2011 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என்று நிர்ணயம் செய்தது குறித்தும் [1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348 (d) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. மற்றும் (ii) 2012 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 4/2012) 25-10-2011 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என்று நிர்ணயம் செய்தது குறித்தும் [1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1978) 88(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 27-1-2012 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள்.

97. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

2014 ஜூலை 30]

98. 2012-2013 ஆம் ஆண்டிற்கான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

99. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

246. மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

247. மானியக் கோரிக்கை எண் 11-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

248. மானியக் கோரிக்கை எண் 9-பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

249. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

250. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

251. மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2014-2015. (தமிழ்)